


முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நீலகிரி மாவட்டம், உதகை மத்திய பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை லிமிடெட்) சார்பில், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு 5 புதிய பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் அரசு போக்குவரத்துத் துறை பொது மேலாளர் ஜெகதீசன், நீலகிரி மாவட்டக் கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு, அவைத் தலைவர் போஜன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.



சேலம் மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் ஒன்றியத்தில் ரூ.3.01 கோடி மதிப்பீட்டில் புதிய வளர்ச்சி திட்டப் பணிகளை, அமைச்சர் இரா.ராஜேந்திரன் தொடங்கி வைத்தார். அப்போது மாவட்ட ஆட்சியர் டாக்டர் பிருந்தா தேவி, ஒன்றியச் செயலாளர்கள் ஏ.விஜயகுமார், க.ரத்தினவேல் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### தனக்கு அடையாளம் கிடைக்கும் என்பதால்தான்

# அன்புமணி தி.மு.கழகத்தை விமர்சனம் செய்கிறார்!

## அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

திருச்சி, ஆக. 12-

திருச்சி பஞ்சப்பூரில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தில் தாழ்தள பேருந்து சேவை மற்றும் ஆம்னி பேருந்து சேவையை நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு கொடியசைத்து தொடக்கி வைத்தார்.



பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்து பேசிய அமைச்சர் கே.என்.நேரு,

கும்பகோணம் போக்குவரத்து கோட்டம் கலைஞர் தொடங்கியது அதனால் அதை மாற்றவில்லை. கும்பகோணத்தில் இருந்தாலும் திருச்சியில் இருந்தாலும் மக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் வந்து கொண்டு தான் உள்ளது.

சென்னையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் துப்புரவு தொழிலாளர்களிடம் நான், அறநிலையத் துறை அமைச்சர், துறை செயலாளர் உள்ளிட்டோர் பேச்சுவார்த்தை நடத்தினோம். அவர்களிடம் ஊதியம் குறைக்கப்படாது அவர்களுக்கான எந்த சலுகைகளும் பறிக்கப்படாது என்பதை உறுதியாக தெரிவித்தோம்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் பலர் மீண்டும் பணிக்கு வந்து விட்டார்கள். அமைச்சர் சேகர்பாபு தொடர்ந்து அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். இன்னும் இரண்டு நாட்களில் போராட்டம் சுமூகமாக முடிவடையும்.

எடப்பாடி பழனிச்சாமிக்கு வேறு எதுவும் பேசுவதற்கு இல்லை என்பதால் தி.மு.க. கூட்டணியில் கருத்து வேறுபாடு உள்ளது என தொடர்ந்து பேசி வருகிறார். அவர் கூட்டணியில் இருந்தவர்கள் தான் முதல்வரை சந்தித்துள்ளார்கள்.

எடப்பாடி பழனிச்சாமியின் கனவு பலிக்காது திமுக கூட்டணி தொடரும் மீண்டும் தளபதி தான் தான் முதலமைச்சராவார்.

தி.மு.க.வை வீழ்த்த வேண்டும் என பா.ம.க. ஏற்கனவே பாஜகவுடன் கூட்டணி அமைத்தார்கள் ஆனால் தி.மு.க.வை வீழ்த்த முடியவில்லை. தி.மு.க.வை விமர்சித்தால் தான் அடையாளம் கிடைக்கும் என்பதால் அன்புமணி ராமதாஸ் தி.மு.க.வை விமர்சனம் செய்து வருகிறார்.

பா.ம.க.வின் ஒரு தரப்பினர் எங்கள் கூட்டணிக்கு வருவார்களா என்பது எனக்கு தெரியாது ஆனால் எங்கள் கூட்டணி வலுவாக உள்ளது.

தி.மு.க. ஆட்சியில் தேர்தல் நேரத்தில் அளித்த பெரும்பாலான வாக்குறுதிகளையும் அறிவிக்காத வாக்குறுதிகளையும் நிறைவேற்றி உள்ளோம். திமுக ஆட்சியில் மக்கள் நன்றாக இருக்கிறார்கள் மீண்டும் தி.மு.க. தான் ஆட்சி அமையும்.

பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் மீண்டும் தமிழகம் வருகிறாரே என்கிற கேள்விக்கு நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பு பிரதமர் 8 முறை தமிழகத்திற்கு வந்தார் திமுக 40 க்கு 40 இடங்களில் வெற்றி பெற்றது என தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் திருச்சி மாவட்ட ஆட்சியர் சரவணம், மேயர் அன்பழகன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### மாநிலக் கல்விக் கொள்கையில்

# ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து அரசு செய்துள்ளது!

## பா.ஜ.க.வின் விமர்சனத்திற்கு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பதில்!

புதுக்கோட்டை.ஆக.12-

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றம் சார்பாக கல்வி உரிமை மீட்பு கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கருத்தரங்கிற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியதாவது:-

தமிழகத்தில் தற்போது உள்ள அனைவருமே இரு மொழிக் கொள்கையை கடைப்பிடித்து படித்தவர்கள் தான். இரு மொழி கொள்கைதான் தமிழகத்திற்கு என்று முதல்வர் உறுதியாக கூறிவிட்டார்.

மனப்பாடம் செய்து தேர்வு எழுதாமல் புரிந்து கொண்டு தேர்வு எழுத வேண்டும் என்று மாநில கல்விக் கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் சிந்தித்து கற்க வேண்டும் என்பதற்காக என்னென்ன தேவையோ அவை அனைத்தும் மாநில கல்விக் கொள்கையில் இடம் பெற்றுள்ளது.

மாணவர்களுக்கு மன உளைச்சல் இல்லாமல் இருப்பதற்காக கற்றலும் கற்பித்தலும் திட்டத்தையும் மாநில கல்விக்கொள்கையில் கொண்டு வந்துள்ளோம்.

ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து மாநிலக் கல்விக் கொள்கையில் அரசு செய்துள்ளது. அதை சார்ந்து விவாதத்திற்கு வர முடியாத பா.ஜ.க. பல்வேறு விமர்சனங்களை வைத்து வருகிறது.

கண்மூடித்தனமாக அரசியலுக்காக நாம் எதையும் எதிர்க்கவில்லை.

எது எது எல்லாம் மாணவர்களுக்கு தேவையோ அதை நாங்கள் எடுத்துக் கொண்டுள்ளோம்.

அதை வைத்து தான் மாநில கல்விக் குழு உருவாக்கப்பட்டுள்ளது.

இதனை அனைத்து மாநிலங்களும் முன் உதாரணமாக எடுத்துக்கொண்டு அவர் அவர்களுக்கு என்று மாநில கல்விக் கொள்கையை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதுதான் நமது ஆசை.

இதை செய்தால் தான் நான் நிதி தருவேன் என்று கூறுவதை நாம் எப்படி ஏற்றுக்கொள்வது.

இவ்வாறு இருக்கும் போது மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் போன்றவர்கள் இவ்வாறு கருத்து கூறுவதை நாம் எப்படி ஏற்பது?

அவர்கள் கூறும் கருத்திற்கு நாம் வருத்தம் தான் பட வேண்டும்.

கண்மூடித்தனமாக நாம் எதையும் எதிர்க்கவில்லை.

மொழி சார்ந்து நம்முடைய கலாச்சாரத்தை மாற்றுவது தொடர்பாக ஏதாவது கொண்டு வந்தால் நாம் ஏற்கவில்லை. உதாரணத்திற்கு குலக்கல்வி முறையை கொண்டு வந்தால் நாம் ஏற்க முடியாது.

மும்மொழிக் கொள்கையை கொண்டு வருவோம் என்று கூறினால். முதலில் எதிர்ப்பவர்கள் நாங்களாகத்தான் இருப்போம்.

மூன்றாம் வகுப்பு, ஐந்தாம் வகுப்பு, எட்டாம் வகுப்பு மாணவர்கள் தேர்வு எழுத வேண்டும் என்று நாம் கட்டாயப்படுத்தினால் அது ட்ராப் ரேஷியோவை தான் அதிகரிக்கும்.

மாநிலக் கல்விக் கொள்கை குறித்து அனைத்து அரசியல் கட்சிகளும் வரவேற்கின்றன பா.ஜ.க.விடமிருந்து வரவேற்பு நாம் எதிர்பார்க்க முடியாது.

இவ்வாறு அன்பில் மகேஷ் பொய்யமொழி கூறினார்.

### கரூர் - நெரூரில்

# ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ மருத்துவ முகாம்!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

கரூர், ஆக.12-

“நலம் காக்கும் ஸ்டாலின்” மருத்துவ முகாம் கரூர் அருகே உள்ள நெரூரில் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி பார்வையிட்டு, மருந்துப் பெட்டகம் மாத்திரைகளை வழங்கினார்.

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம். நெரூர் பகுதியில் ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்ட மருத்துவ முகாம் கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல் தலைமையில் நடைபெற்றது. முகாமை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி பார்வையிட்டு ஆய்வு செய்தார். தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், ஆண்டாங்கோவில் கிழக்கு ஊராட்சியில், தூய்மைப் பணிகள் மேற்கொள்ள ரூ. 32.89 இலட்சம் மதிப்பீட்டில் 13 புதிய மின்கல வாகனங்கள் மற்றும் ரூ2.48 இலட்சம் மதிப்பீட்டில் சீருடைகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை 44 தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கினார்.

பின்னர் கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி கூறியதாவது:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்கள். இத்திட்டத்தின் மூலம் அனைத்து வகையான உடல் பரிசோதனைகளும், 17 வகையான சிறப்பு மருத்துவ சிகிச்சைகளும். முதல்வரின் விரிவான காப்பீடு திட்ட அட்டை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளன.

நலம் காக்கும் ஸ்டாலின்” பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமில் பொது மருத்துவம். பொது அறுவை சிகிச்சை, எலும்பு முறிவு மருத்துவம். பேறு கால மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இதய நல மருத்துவம். நரம்பியல் சிறப்பு மருத்துவம். நுரையீரல் சிறப்பு மருத்துவம், நீரழிவு நோய்க்கான சிறப்பு மருத்துவம். தோல் சிறப்பு மருத்துவம், பல் மருத்துவம். கண் சிறப்பு மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், மனநல மருத்துவம். இயன்முறை மருத்துவம். சித்த மருத்துவம். உணவியல் மருத்துவம். ஆகிய 17 சிறப்பு மருத்துவ சிகிச்சை சிறப்பு மருத்துவ நிபுணர்களால் வழங்கப்படுகிறது. இம்முகாமில் அனைத்து சிகிச்சைகளும் பரிசோதனைகளும் ஆன்லைன் மூலம் பதிவு செய்யப்படுகிறது.

அந்த வகையில் கரூர் மாவட்டத்தில் ஒரு வட்டாரத்திற்கு 3 முகாம்கள் வீதம் மொத்தம் 24 முகாம்களும் கரூர் மாநகராட்சியில் 3 முகாம்களும் என மொத்தம் 27 முகாம்கள் பிப்ரவரி 2026 வரை நடைபெற உள்ளது. ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் ஒரு சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட உள்ளது. குழந்தைகள். நீரழிவு நோய் மற்றும் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள். இதய நோயாளிகள். படுக்கையுற்ற நோயாளிகள். மற்றும் மாற்றுத்திறனாளிகளை இலக்காகக் கொண்டு இம்முகாம்கள் நடத்தப்பட உள்ளது.

முதலமைச்சர் அவர்கள் மருத்துவத் துறையில் பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் நகர்புறங்கள் மற்றும் கிராமப்புறங்கள் என அனைத்து பகுதிகளிலும் நடைபெறக்கூடிய மிகச் சிறப்பான ஒரு திட்டமாக ‘நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டத்தை செயல்படுத்தியுள்ளார்கள்.

தாந்தோணிமலை அரசு மேல்நிலைப்பள்ளியில் சென்ற வாரம் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின்” திட்ட முகாமின் மூலம் 332 ஆண்கள் 399 பெண்கள் மற்றும் 21 குழந்தைகள் என மொத்தம் 752 நபர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொதுமக்களின் உடல் நிலையை பரிசோதனை செய்து அதற்கேற்ப மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்படுவதற்காக அனைத்து ஏற்பாடுகளும் மிகச் சிறப்பாக செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக, ‘நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமில் 5 கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகமும் மற்றும் 5 காசநோயால் மாத்திரைகளையும் செந்தில்பாலாஜி வழங்கினார். இதனைத் தொடர்ந்து, தாந்தோணிமலை ஊராட்சி ஒன்றியம். ஆண்டாங்கோவில் கிழக்கு ஊராட்சியில் வீடு வீடாகச் சென்று குப்பைகளை சேகரிக்க ஏதுவாக தூய்மை பாரத இயக்கம் மற்றும் 15வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் ரூ. 32.89 இலட்சம் மதிப்பீட்டில் புதிய 13 மின்கல வாகனங்களையும், ரூ.2.48 இலட்சம் மதிப்பீட்டில் 44 தூய்மைப் பணியாளர்கள் மற்றும் தூய்மை காவலர்களுக்கு சீருடை மற்றும் பாதுகாப்பு உபகரணங்களையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம் (குளித்தலை), ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), மாவட்ட வருவாய் அலுவலர் ம. கண்ணன். இணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) மரு.செழியன், துணை இயக்குநர் (தரைப் பணிகள் மரு சுப்பிரமணியன் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதி, கண்ணுகுடி மேற்கு ஊராட்சியில் புதிய பகுதி நேர அங்காடியை தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி ஆகியோர் திறந்து வைத்தனர். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.ராமச்சந்திரன், கே.டி.மகேஷ் கிருஷ்ணசாமி, ஒன்றியக் கழகச் செயலாளர் முருகையன், பொதுக்குழு உறுப்பினர் திராவிட கதிரவன் மற்றும் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. குவைத் அயலக அணி சார்பாக

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவஞ்சலி!

## “கலைஞர் 102” உலக சாதனைப்புத்தகம் வெளியீடு!

குவைத், ஆக.12-

அன்னை தேசத்தின் அற்புத தலைவருக்கு எண்ணெய் தேசமாம் குவைத் நாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவஞ்சலியை முன்னிட்டு மாபெரும் இரங்கல் கூட்டம் நடைபெற்று கலைஞர் 102 என்கிற புத்தகமும் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்விற்கு முதன்மைச் செயலாளர் பத்தமடை க.சிந்தாபக்கீர் தலைமை ஏற்றார். தொழிலாளர் அணி செயலாளர் போரூர் ராயல் ஜி.பிரகாஷ், செயலாளர் புதுக்கோட்டை மு.பஷீர் அகமது ஆகியோர் நிகழ்வை தொகுத்து வழங்கினார்.

மண்டல செயலாளர்கள் கண்டியூர் இரா.சாத் அன்வர், துணைப் பொருளாளர் பத்தமடை க.நாகூர், துணைச் செயலாளர் புதுவை சபிக்கான், தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் புதுகை கனி, இளைஞரணி இணைச்செயலாளர் சக்கந்தி மோ.தமிழ்ச்செல்வன், துணைச் செயலாளர் இ.பாஞ்சி பீர் முகமது ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

மேலும் தி.மு.க. அயலக அணி குவைத் சார்பாக ஏடு புகழ் கொண்ட வரலாற்றுத் தலைவர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு நாளையொட்டி தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் புகழைப் போற்றிடும் வகையில் தாய்மொழி உறவுகள் அமைப்பு தொகுத்து வழங்கிய முத்தமிழ் அறிஞர் கலைஞர்102 (செம்மொழி நாள் விழா கவிதைகள்) என்ற புத்தகத்தை முதன் முதலாக குவைத்தில் தலைவர் கலைஞர் அவர்களின் 7ம்ஆண்டு நினைவு அஞ்சலி கூட்டத்தில் வெளியிட்டு தலைவர் கலைஞர் அவர்களின் புகழுக்கு மேலும் புகழ் சேர்க்கப்பட்டது.

இந்த கவிதை மலரை தாய்மொழி உறவுகள் நிறுவனர், சமூக சேவகர் கவிஞர் முத்துவேலு பிரீன்ஸ் ராமு, கவிஞர் மு.பா.தமிழ்ச்செல்வன், பேராசிரியர். முனைவர், நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி துணைத் தலைவர் சு.தங்க பாண்டி தொகுத்து வழங்கினார். இந்த கவிதை புத்தகத்தை ஆல் இந்தியா புக் ஆஃப் ரெகார்ட்ஸ் அமைப்பு சாதனையாக அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக தி.மு.க. அயலக அணி குவைத் சார்பாக நவீன தமிழ்நாட்டின் தந்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு செ மேற்கு தாம்பரத்தில் உள்ள குட்லைப் சென்டர் ஆதரவற்றோர் இல்லத்தில் வசிக்கக்கூடிய பள்ளி மாணவச் செல்வங்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலைஞரின் நினைவை போற்றும் விதமாக விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பொறுப்பாளர்கள் கா.மீ அன்பரசன், அறிவழகன், அழகர்சாமி ஆகியோர் தலைவர் கலைஞரின் சாதனையையும் சமூக நீதிக் கொள்கைகளின் கோட்பாடு களையும் எடுத்துரைத்தனர்.

தமிழக வாழ்வுரிமை கட்சியின் பொறுப்பாளர் புதுகை தமிழன் சாகுல், ஹக்கீம் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பாளர் மணிவாசகம் தமிழ்நாடு முஸ்லிம் கலாச்சார பேரவை முன்னாள் தலைவர் சத்திரமனை அசன் முகமது உள்ளிட்டோர் புகழஞ்சலி செலுத்தினார். கலைஞர் 102 என்ற கவிதை தொகுப்பு நூலை முதன்மைச் செயலாளர் பத்தமடை சிந்தா பக்கீர் வெளியிட பொறியாளர் ராமன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

உதவும் கரங்கள் அமைப்பின் அப்துல் மஜீத்,அப்துல் நாசிக், பக்ருதீன், ஆகியோர் மற்றும் நந்தவனம் அமைப்பின் நிறுவனர் ரவி, மற்றும் சகோதரி தேவி ரவி கலகலப்பு நண்பர்கள் குழும தலைவர் சரவணன் மற்றும் கழக அயலக அணி மூத்த நிர்வாகிகள் மற்றும் உடன் பிறப்புக்கள் முனசந்தை சிக்கந்தர், புதுகை கனி, கரம்பக்குடி ஜாபர் சாதிக், மயிலாடுதுறை நாகேந்திரன், திட்டச்சேரி சாகுல் ஹமீது, கரம்பக்குடி அப்பாஸ், கொளத்தூர் கணேஷ், சீர்காழி ஹாஜி அலி, புது ஆத்தூர் சாகுல் ஹமீத், முத்து மருதையா, ராமநாதபுரம் அஜீஸ், குடவாசல் சதாம், கார்த்திக் பாலா, அப்துல் காதர், கார்த்திகேயன், குகன், மணி ஹனிபா, சாதிக் அப்துல் மாலிக், மணிகண்டன், விக்னேஷ், சுல்தான், கார்த்திகேயன், போன்ற ஏராளமானோர் பெரும் திரளாக பங்கேற்று புகழஞ்சலி செலுத்தினர்.

இறுதியாக இணைச் செயலாளர் காட்டூர் சொ. ஆறுமுகம் புகழஞ்சலி தெரிவித்து இரங்கல் உரையாற்றினார்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூரில் மாவட்டப் பொருளாளர் ஆர்.வி.ஸ்ரீராம் தலைமையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு தி.மு.க.வினர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் மாவட்ட, நகர, நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.